**செய்தி வெளியீடு எண் : 2045** **நாள் : 11.10.2023**

**செய்தி வெளியீடு**

தமிழ்நாட்டில் இணையவழி சூதாட்டத்தினை தடுக்கும் / ஒழுங்குபடுத்தும் விதமாக, 2022–ஆம் ஆண்டு தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடைசெய்தல் மற்றும் இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குமுறைப்படுத்துதல் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 9, 2023) இயற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, அச்சட்டத்தின் படி கீழ்காணும் தலைவர் / உறுப்பினர்கள் உள்ளடக்கிய தமிழ்நாடு இணையவழி விளையாட்டு ஆணையம் (Tamil Nadu Online Gaming Authority) ஒன்றினை அமைத்து 18.08.2023 அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது:–

| | | |
|---|---|---|
| 1. | திரு. முகமது நசிமுதீன், இஆப., (ஓய்வு) | தலைவர் |
| 2. | முனைவர், எம்.சி. சாரங்கன், இகாப., (ஓய்வு). | உறுப்பினர் |
| 3. | முனைவர், சி. செல்லப்பன், பேராசிரியர் (ஓய்வு), பொறியியல் கல்லூரி, கிண்டி, சென்னை–25. | உறுப்பினர் |
| 4. | திரு. ஓ. இரவீந்திரன், உளவியல் மருத்துவர் (ஓய்வு), ஸ்ரீராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி, போரூர். | உறுப்பினர் |
| 5. | திரு. விஜய் கருணாகரன், நிறுவனர் மற்றும் தலைமை செயல் அலுவலர், இன்கேஜ் குழு (InGage Group) | உறுப்பினர் |

இவ்வாணையமானது, 15.09.2023 அன்று முதல் கீழ்க்காணும் முகவரியில் செயல்படத் துவங்கியுள்ளது:–

தமிழ்நாடு இணையவழி விளையாட்டு ஆணையம்
முதல் மாடி, நகர்ப்புற நிருவாக கட்டடம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை, எம். ஆர். சி. நகர்,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை–28.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :
tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in